**வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்**

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் சேப்பாக்கம், சென்னை –05. | அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். |

**கடித எண். பணி 5(1) / 2639573 / 2022, நாள் 23.06.2022**

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கிராம நிருவாகம் – தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருடாந்திர பொது கலந்தாய்வு நடத்துவதற்கு சில அறிவுரைகள் வழங்குவது – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண். 515, வருவாய் துறை, நாள் 25.08.2008.
2. தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் மனு நாள் 16.06.2022.

------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் மனுவின் மீது தங்களின் கவனம் ஈர்க்க விழைகிறேன்.

2) பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்ற சங்க மனுவில் அனைத்து மாவட்டங்களிலும் அரசாணை (நிலை) எண்.515, நாள் 25.08.2008–ன் படி கிராம நிருவாக அலுவலர்களுக்கு பொது கலந்தாய்வை 01.07.2022–க்கு முன்பாக நடத்தி முடித்து 1432–ஆம் பசலியின் தொடக்கத்திலேயே கிராமங்களில் பணியேற்று கிராமக் கணக்குகளை தொய்வின்றி முறையாக பராமரிக்க ஏதுவாக பொது கலந்தாய்வை நடத்திட உரிய ஆணை பிறப்பிக்குமாறு கோரியுள்ளனர்.

3) இந்நேர்வில் பார்வை 1–ல் காணும் அரசாணை (நிலை) எண். 515, நாள் 25.08.2008–ல் பத்தி 2(b) மற்றும் (c)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

**(b) அரசின் பொது மாறுதல் ஆணை கிராம நிர்வாக அலுவலருக்கு பொருந்தாமை:**

கிராம நிர்வாக அலுவலர்களின் பணி விதிகளின் படி, அவர்கள் பொறுப்பு கிராமங்களிலேயே தங்கி பணிபுரிதல் வேண்டும். மேலும் கிராம நிர்வாக அலுவலர்களை பொறுத்த வரையில், அவர்களது பணியின் தன்மை மற்றும் பணிபுரியும் காலம் ஆகியன கிராமங்களின் வகைப்பாட்டை

பொறுத்து முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே ஏனைய அரசு அலுவலர்களைப் போன்று, வேறு ஊர்களுக்கோ, மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ மாறுதல் செய்யப்படுவதில்லை. பெரும்பாலும் ஒரு வட்டத்திற்குள், ஏற்கெனவே பணிபுரியும் கிராமத்திற்கு அருகாமையிலேயே பணிமாற்றம் செய்யப்படுகின்றனர். தவிர்க்க இயலாத ஒரு சில நேர்வுகளில் மட்டுமே, வட்டம் விட்டு வட்டத்திற்கு கோட்ட அளவில் மாறுதல் செய்யப்படுகின்றனர். சொந்த வட்டம் மற்றும் மாவட்டத்திற்குள்ளேயே மாறுதல் செய்யப்படுவதால், அவர்களது குழந்தைகளின் கல்வி வசதியை கருத்தில்கொண்டு, பெரும்பாலானோர் அவர்கள் பணிபுரியும் கிராமப் பகுதியை ஒட்டியுள்ள நகர்ப்புறங்களில் நிரந்தரமாக குடியிருப்பு வைத்து வசித்து வருவதால், கல்வி ஆண்டு துவங்கிய பின் மாறுதல் செய்வதால் எவ்வித பாதிப்பிற்கும் உட்படும் வாய்ப்பு இல்லை. கிராம நிர்வாக அலுவர்களின் பணிகளும், கடமைகளும் ஏணைய அரசு ஊழியர்களுடைய பணிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட களப்பணி என்பதால், ஏப்ரல் / ஜீன் மாதங்களில் ஏனைய அரசு ஊழியர்களுக்கு பொது மாறுதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 07.01.1994 என்பது கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது மாறுதல்களுக்கு முற்றிலும் பொருந்தாது. இதனால் பொதுவான அரசாணையின் அடிப்படையில், வேண்டுமென்றே வழக்குகள் தொடுத்து தடையாணை பெறுவதை தவிர்க்க நல்ல வழி பிறக்கும்.

**(c) <u>கிராம நிர்வாக அலுவலர்களின் பொது மாறுதல் காலம் "மே" மாதம் என்பதை ரத்து செய்தல்</u>**

கிராம நிர்வாக அலுவலர்களுக்காக வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.64, வருவாய்த் துறை, நாள் 10.08.1992-ல் கூறப்பட்டுள்ளபடி, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாறுதல் காலம் "மே மாதம்" என்ற ஆணை ரத்து செய்யப்பட வேண்டும். ஏனெனில், கிராம நிர்வாக அலுவலர்களது மாறுதல் எந்நேரத்திலும், முன் பத்தியில் கூறியபடி செயல்படுத்தப்படலாம். எனினும், கிராம நிர்வாக அலுவலர்களது பொது மாறுதல் குறித்து, அவர்களது தகுதியை நிர்ணயம் செய்யும் நாளாக "ஜீலை முதல் தேதி" கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அரசு ஊழியர்களின் பொது மாறுதல்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிறப்பிக்கப்படும் அரசின் தடையாணை, தேர்தல் தொடர்பான பணிகள், அப்போதைய அவசியம் மற்றும் அவசர பணிகள் மற்றும் அந்த ஆண்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், கடந்த ஆண்டில் மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தை கணக்கில் கொண்டும், ஒவ்வொரு ஆண்டும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு தனி ஆணைகள் பிறப்பிக்கப்படும். அவ்வாறு, வருடத்தில் எந்த மாதத்திலும் பொது மாறுதல் ஆணை பிறப்பிக்கும் பொழுது, அந்தந்த ஆனணைகளில் நிர்ணயிக்கும் நாளன்று 'அ' கிராமத்தில் ஓராண்டு மற்றும் 'ஆ' கிராமத்தில் மூன்றாண்டுகள் பணி முடித்த கிராம நிர்வாக அலுவலர்களை தொடர்ந்து அதே கிராமத்தில் பணிபுரிய அனுமதிக்கலாகாது.

4) எனவே, அரசாணை (நிலை) எண்.515, நாள் 25.08.2008-ன் படி கிராம நிர்வாக அலுவலர்களின் பொது கலந்தாய்வினை 30.06.2022-க்குள் நடத்தி முடித்து அதனை 01.07.2022 முதல் நடைமுறைப்படுத்துமாறும் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களுக்கு பொது கலந்தாய்வின் போது கீழ்க்கண்ட நெறிமுறைகளையும் பின்பற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்:

i. அரசாணை (நிலை) எண்.515, நாள் 25.08.2008-ன் படி முன்னுரிமை பட்டியலை அனைவரின் பார்வைக்கும் வைத்தல் வேண்டும்.
ii. தண்டனை பெற்ற மற்றும் 17(b)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு முன்னுரிமை பட்டியலில் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.
iii. மாண்புமிகு உயர் நீதிமன்றங்களின் பல தீர்ப்புகளில் கிராம நிருவாக அலுவலர்கள் கலந்தாய்வில் முன்னுரிமை பட்டியல் சரியாக கடைபிடிக்கப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது மற்றும் சமீபத்தில் வந்த வழக்குகளிலும் கிராம நிருவாக அலுவலர்களின் கலந்தாய்வில் விதிமுறைகளை கடைபிடிக்க அறிவுறுத்தியுள்ளது.

தங்கள் நம்பிக்கையுள்ள
ஒம்/-எஸ்.கே.பிரபாகர்
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்

24/6/22